# *27*

# கர்த்தரால் சிட்சிக்கப்படுதல்

## (12:4-11)

*எபிரெயருக்கு எழுதிய நிருபம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்கள், பல சோதனைகளை அனுபவித்திருந்தனர் (10: 32-34) மற்றும் வெளியேறிவிடும் விளிம்பில் இருந்தனர். அவர்கள் தங்களுக்கு நேரிட்ட இடர்ப்பாடுகளை, இன்னும் அதிகமான தேவபக்தியுடன் கண்ணோக்கும் வழியை அவர்களுக்குத் தருவதற்கு, இந்தப் பாடத்திற்கான வேதவசனப் பகுதியில் எழுத்தாளர் முயற்சி செய்து கொண்டிருந்தார். முதலாவதாக அவர், இயேசு கடந்து சென்ற பிரச்சனைகளுடன் ஒப்பிடுகையில் அவர்களின் பிரச்சனைகள் ஒன்றுமற்றவையாக இருந்தன என்று குறிப்பிட்டார் (வசனம் 4). இரண்டாவதாக அவர், பின்வரும் முக்கியமான கொள்கையை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காகப் பழைய ஏற்பாட்டில் இருந்து மேற்கோள் காண்பித்தார் (வசனங்கள் 5, 6; காண்க யோபு 5:17; நீதிமொழிகள் 3:11, 12): தேவன் தாம் அன்புகூருகிறவர்களைச் சிட்சிக்கிறார். இந்தப்பாடத்தில் நாம், கர்த்தரால் சிட்சிக்கப்படுதல் என்பதைப் பற்றிக் கலந்துரையாடுவோம். இது ஒரு சுலபமான பாடமாக இருப்பதில்லை, ஆனால் இது தரக்கூடிய உட்கண்ணோட்டங்களின் நிமித்தம் இது நாடிப்பெறத் தகுதியான ஒன்றாக உள்ளது. கர்த்தரால் சிட்சிக்கப்படுதல் என்றால் *__என்ன?__* *அவர்* __ஏன்__ *நம்மைச் சிட்சிக்கிறார்? மற்றும் தேவனால் சிட்சிக்கப்படுதலுக்கு நாம்* __எவ்வாறு__ *பதில் செயல் செய்ய வேண்டும்? என்பவற்றைத் தீர்மானிக்க முயற்சி செய்வதற்கு நாம் வேதவசனங்களை ஆராய்ச்சி செய்வோம்.*

## அது என்னவாக உள்ளது?

12:4-11ல் நாம், பரலோகத்தின் தந்தையுடன் பூமிக்குரிய தந்தையர்கள் ஒப்பிடப்படுவதைக் காண்கிறோம். பூமிக்குரிய தந்தையர்களால் செயல்படுத்தப்படும் சிட்சையானது சில வகைகளில், தேவனால் செயல்படுத்தப்படும் சிட்சையைப் போன்றதாக உள்ளது. மற்ற வகைகளில் அது மனதைத் தாக்கும் வகையில் வேறுபட்டுள்ளது.

### பூமிக்குரிய தந்தையர்கள்

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும், தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் புத்தி கூறினர் (நீதிமொழிகள் 13:1; 19:18; எபேசியர் 6:4). "சிட்சை" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள (*paideia* என்ற) வார்த்தை, "பிள்ளை" என்பதற்கான (*pais* என்ற) வார்த்தையின் வினைச்சொல் வடிவமாக உள்ளது, இது "பிள்ளைகளைப் பயிற்றுவித்தல்" என்று அர்த்தப்படுகிறது. இது - ஒரு பிள்ளையானவன் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான எதையும் - "தயவும் உறுதியும்"[1] ஆகிய இரண்டிலும் பயிற்றுவிப்பதைக் குறிக்கிறது.

அடிப்படையில், இரண்டு வகையான சிட்சித்தல்கள் உள்ளன: தடுத்தல் மற்றும் திருத்துதல். ஒரு பிள்ளையானவன் தவறு செய்தலில் இருந்து தடுத்தல் என்பது (இந்த சொற்றொடர் சுட்டிக்காண்பிக்கிறபடி) தடுக்கும் சிட்சித்தலுடைய நோக்கமாக உள்ளது. இது போதனை மற்றும் எச்சரிக்கை ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இது, ஒரு பிள்ளையானவன் செய்ய வேண்டிய பணிப்பொறுப்புகளை அவனுக்குக் கொடுத்து, அவன் அதைத் தனது திறனில் மிகச்சிறப்பாகச் செய்து முடிப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதை உள்ளடக்க முடியும். (நான் ஒரு மனிதனாக வளருவதற்கு உதவ எனது தந்தை முயற்சி செய்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன்; செய்வதற்கு அர்த்தம் நிறைந்த பணிகளை நான் எப்போதுமே கொண்டிருப்பதை அவர் நிச்சயப்படுத்திக் கொண்டார் மற்றும் நான் வயதானவனாக மற்றும் பலமுள்ளவனாக வளருகையில், வளர்நிலையில் கடினமான பணிப்பொறுப்புகளை எனக்கு அவர் கொடுத்தார்.)

திருத்தும்படி சிட்சிக்கப்படுதல் என்பது, ஒரு பிள்ளையானவன் தவறு செய்தபின்பு செயல்படுத்தப் படுவதாக உள்ளது. இது, ஒரு பிள்ளையானவன் தனது செயல்களில் விளைவுகளைப் பட்டு அனுபவிக்க அனுமதித்தல் என்ற வகையில் கண்டனம் பண்ணுதலையும் தண்டனையையும் உள்ளடக்க முடியும். (ஆம், நான் வளருகையில், திருத்தும்படி சிட்டித்தலில் எனது பங்கையும் நான் கொண்டிருந்தேன்.)

**பரலோகத்தில் உள்ள தந்தை**

கர்த்தரால் சிட்சிக்கப்படுதல் என்பது, தடுக்கும் மற்றும் திருத்தும் என்ற இரண்டு கூறுகளையும் உள்ளடக்குகிறது. இந்த சத்தியத்தைப் பற்றிய, மனதைத் தாக்கும் உதாரணத்தைப் பற்றி யூதக் கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பார்கள்: வனாந்தரத்தில் அவர்களின் முற்பிதாக்களின் அனுபவங்கள். சீனாய் மலையில் தேவனுடைய வல்லமையை இஸ்ரவேல் மக்கள் கண்டபோது, அது தடுக்கும்படி சிட்சிக்கப் படுதலை நோக்கங்கொண்டிருந்தது (காண்க உபாகமம் 4:36). வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் என்பது, திருத்தும்படி சிட்சித்தலைச் செய்தது (காண்க உபாகமம் 8:2-5).[2] சிட்சித்தலின் இரண்டு வகைகளுமே, இஸ்ரவேல் மக்களுக்கு நன்மையை நோக்கங் கொண்டிருந்தன.

தேவனுடைய தடுக்கும்படி சிட்சித்தல் மற்றும் திருத்தும்படி சிட்சித்தல் ஆகியவற்றில் அதிகமானது, அவரது வசனத்தின் மூலம் வருகிறது (காண்க நீதிமொழிகள் 6:23). தேவனுடைய ஏவுதல் பெற்ற வார்த்தை,சரியானது எது மற்றும் தவறானது எது என்று நமக்குக் கூறுகிறது. இது, தவறு செய்தலின் விளைவுகளைப் பற்றி நம்மை எச்சரிக்கிறது. தேவன் தமது வசனத்தில், நாம் வளருவதற்கும் பக்குவம் அடைதலுக்கும் நமக்கு உதவக்கூடிய பொறுப்புகளை நம்மீது விதிக்கிறார். நாம் தவறுகிறபோது, வசனமானது நம்மைக் கடிந்துகொள்கிறது. நாம் கீழ்ப்படியத் தவறுகிறபோது, சட்டப்படி நாம் அதன் விளைவுகளைப் பட்டு அனுபவிக்கிறோம்.

இங்கு குறிப்பிடப்படுகிற திட்டவட்டமான சிட்சித்தல், தோற்றகால வாசகர்கள் கடந்துசென்ற சிரமங்களை - அவர்களை “துக்கம்நிறைந்தவர்கள் ஆக்கிய” இடர்ப்பாடுகளை (வசனம் 11) உள்ளடக்குகிறது என்பது தெளிவு. இது அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆனதில் இருந்து எதிர்கொண்டிருந்த பிரச்சனைகளை

உள்ளடக்கி இருக்கும். இது குறிப்பாக, உபத்திரவத்தை உள்ளடக்கி இருந்தது (வசனம் 4அ). யாரேனும் ஒருவர், "தேவன் நம்மைச் சிட்சிப்பதற்கு உபத்திரவத்தை அனுப்புகிறார் என்று நீங்கள் கூறுகிறீர்களா?" என்று கேட்கலாம். இல்லை, ஆனால் சிலவேளைகளில் தேவன், நம்மைச் சிட்சித்தலின் ஒரு பகுதி என்ற வகையில், நாம் சிரமம் அனுபவிப்பதை *அனுமதிக்கிறார்.*[3] (இது ஒரு கடினமான பாடமாக உள்ளது என்று நான்உங்களுக்குக் கூறினேன் அல்லவா!)

பின்வரும் சிந்தனையை நான் கூடுதலாகக் கூறவேண்டும்: மோசமான சிலவிஷயங்கள் நமக்கு நேரிடும்போது, அவற்றைப் பற்றி நாம் அறியாததவை அதிகமாக உள்ளது. அது நமது செயல்களில் இயல்பான விளைவுகளாக இராதபோது, அதைத் தூண்டியது தேவனா அல்லது சாத்தானா அல்லது அது, பாவத்தினால் சேதப்படுத்தப்பட்ட உலகத்தில் வாழ்வதன் விளைவாக மாத்திரம் உள்ளதா என்பதை நாம் அறிய முடிவதில்லை. ஏதேனும் ஒருவகையில் தேவன் அதில் ஈடுபட்டிருந்தால், அவரது உள்நோக்கங்களைப் பற்றி - சகலத்தையும் நமது நன்மைக்கேதுவாகவே அவர் நோக்கங்கொண்டுள்ளார் என்பதைத் தவிர வேறு எதையும் - நாம் நிச்சயமாய் அறிய முடிவதில்லை (ஏசாயா 55:8, 9).

இருந்தபோதிலும் நாம் *அறியக்கூடிய* பல சத்தியங்கள் உள்ளன. நமது வழியில் வருவது எதுவாக இருந்தபோதிலும், அதிலிருந்து தேவன் நன்மையானவற்றை ஏற்படுத்த முடியும் என்று நாம் அறிய முடியும் (ரோமர் 8:28). தேவனுடைய உதவியுடன் அதனூடே நாம் கடந்துசெல்ல முடியும் என்பதையும் நாம் அறிய முடியும் (எபிரெயர் 13:5ஆ, 6).[4] தேவன் நம்மீது *அன்புகூருவதால்,* இதை அவர் நமது வாழ்வில் அனுமதித்துள்ளார் என்று நாம் அறிய முடியும் என்பதே நமக்கான செய்தியாக உள்ளது.

## தேவன் நம்மைச் சிட்சிப்பது ஏன்?

சிட்சித்தலின் நோக்கம் என்னவாக உள்ளது? சிலர், தாங்கள் விரும்பும் எதையும் கொடுப்பதே தங்கள் வாழ்வில் தேவனுடைய பணிப்பொறுப்பாக உள்ளது என்று நம்புவதால், இந்தக் கருத்தைக் கையாள்வதில் இடர்ப்பாட்டைக் கொண்டுள்ளனர். "ஆனால் தேவன், நான் *மகிழ்ச்சியாக* இருப்பதையே விரும்புகிறார்!" என்று கூறி, மக்கள் தங்கள் தேவபக்தியற்ற வாழ்வை நியாயப்படுத்த முயற்சி செய்வதை நான் கேள்விப்பட்டு இருக்கிறேன்.

### பூமிக்குரிய தந்தையர்கள்

பூமிக்குரிய தந்தையர்களில் பெரும்பான்மையானவர்கள், தங்கள் பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருக்கவே விரும்புகின்றனர் - ஆனால் நல்ல தந்தையர்கள் அதைவிட அதிகமானவற்றைத் தங்கள் பிள்ளைகளுக்கு விரும்புகின்றனர். அவர்கள் நல்ல மக்களாக இருக்க வேண்டும், பக்குவமுள்ள மற்றும் பொறுப்பு வாய்ந்த வயதானவர்களாக இருக்க வேண்டும் என்று அந்தத் தந்தையர்கள் விரும்புகின்றனர். கிறிஸ்தவத் தந்தையர்கள், தங்கள் பிள்ளைகள் உண்மைநிறைந்த கிறிஸ்தவ ஆண்களாகவும் பெண்களாகவும் ஆக வேண்டும் என்று விரும்புகின்றனர். தமது பிள்ளைகளைச் சிட்சிக்கத் தவறுகிற ஒரு தந்தை, அவர்கள் என்ன ஆகின்றனர் என்பதைப் பற்றித் தாம் கவலைப் படுவது இல்லை என்று சுட்டிக்காண்பிக்கிறார். அவர்களைத் தாம் நேசிப்பதாக அவர் கூறலாம், ஆனால் அவர்களை அவர் நேசிக்க வேண்டிய பிரகாரம் நேசிப்பது இல்லை.

முதல் நூற்றாண்டுத் தந்தையர் பொதுவாக, ஒரு மகனைச் சிட்சிப்பதற்கு நேரம் எடுத்துக்கொள்வார், அதே வேளையில் சட்டபூர்வமற்ற வகையில் பிறந்த மகனைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள் என்பதை, 7 மற்றும் 8 ஆகிய வசனங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. அந்த நாட்களில் சட்டப்படி பிறந்த பிள்ளை மாத்திரமே சுதந்தரவாளியாக முடியும், அவனுக்கே தந்தை தமது சொத்துக்களை விட்டுச் செல்வார் என்பது விதியாக இருந்தது. தந்தையின் சட்டப்பூர்வமான வாரிசு,இந்த நம்பிக்கைக்குப் பாத்திரமான வகையில் வயதில் வளர வேண்டும் என்பது முக்கியமானதாக இருந்தது.

பூமிக்குரிய தந்தையர்களின் குறைவு படுதல்கள் 10ம் வசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன. மிகச் சிறந்த தந்தையும்கூட தமக்கு நலமானதாகத் தோன்றுகிறபடி மாத்திரமே சிட்சிக்க முடியும். அவர் தமது பிள்ளைகளுக்கு நன்மையானவற்றை மாத்திரமே விரும்பலாம்; ஆனால் மனிதராகவும் பிழையுள்ளவராகவும் இருப்பதால் அவர் தவறுகளைச் செய்வார். (நான் ஒரு நல்ல தந்தையாக இருக்க முயற்சி செய்தேன், ஆனால் நான் செய்த பல தவறுகளைப் பற்றி அறிந்திருக்கிறேன் - மற்றும் நான் செய்த மற்றவற்றைப் பற்றி இன்னமும் அறியாதிருப்பதை நிச்சயித்திருக்கிறேன்.) மனச்சாட்சியுள்ள ஒரு தந்தை, தமது வரையறைகளுக்குள் இருந்தாலும், தமது பிள்ளைகளை "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும்" (எபேசியர் 6:4) வளர்ப்பதற்கு இன்னமும் தம்மால் முடிந்த அளவுக்குச் சிறப்பானவற்றைச் செய்கிறார்.

**பரலோகத்தின் தந்தை**

நமது பெலவீனங்களைக் கொண்டிராத தந்தையை நோக்கி நமது கவனத்தைத் திருப்புவோமாக. தேவன் நம்மைச் சிட்சிப்பது ஏன்? 7 முதல் 11 வரையில் உள்ள வசனங்கள் குறைந்தபட்சம் மூன்று காரணங்களைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன.

(1) நாம் அவரது பிள்ளைகளாக இருப்பதால் அவர் நம்மைச் சிட்சிக்கிறார் (வசனம் 7). அவர் நம்மைச் சிட்சிக்காவிட்டால், அது நாம் அவரது பிள்ளைகளாக இருப்பதில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கும் (வசனம் 8).[5] அவரது பிள்ளைகள் என்ற வகையில் நாம், அவரது தெய்வீக அன்பின் கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறோம் (வசனம் 6; காண்க நீதிமொழிகள் 3:12; வெளிப்படுத்தின விசேஷம் 3:19). சிலர், சோதனைகளும் உபத்திரவங்களும் தேவன் நம்மீது பிரியமற்று இருக்கிறார்,[6] அவர் நம்மை வெறுத்திருக்கலாம் என்றுகூடச் சுட்டிக்காண்பிப்பதாக நம்புகின்றனர். இதற்கு எதிரானதே உண்மையாக உள்ளது என்பதை எபிரெயக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வது அவசியமாக இருந்தது: கர்த்தருடைய சிட்சை என்பது அவரது *அன்பின்* வெளிப்பாடாக உள்ளது.

(2) அவர் "நமது நன்மைக்காக" நம்மை சிட்சிக்கிறார் (வசனம் 10). அவர் நம்மைப் *பெலமுள்ள* மக்களாக்குவதற்காக நம்மைச் சிட்சிக்கிறார். சிட்சையின் மூலமாக நாம் சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்கிறோம் (வசனம் 7). மீண்டுமாக அவர் நம்மை *மேன்மையான* மக்களாக்குவதற்காக நம்மைச் சிட்சிக்கிறார்: "தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு" (வசனம் 10), நாம் "நீதியாகிய சமாதான பலனை" (வசனம் 11) கொண்டிருக்கும் பொருட்டு அவர் நம்மைச் சிட்சிக்கிறார்.

*(3) நாம் ஜீவனை (வசனம் 9ஆ) - இங்கு பரிபூரண ஜீவனையும் இனிவரும் வாழ்வில் நித்திய ஜீவனையும் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் (காண்க யோவான் 10:10ஆ). "நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்" (1 கொரிந்தியர் 11:32). நம்மை மகிழ்ச்சியானவர்கள் ஆக்க வேண்டும், ஆனால் நம்மைப் பரலோகத்திற்கு ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதே நமது வாழ்வில் தேவனுடைய நோக்கமாக உள்ளது.[7]*

## நாம் எவ்வாறு பதில் செயல் செய்ய வேண்டும்?

*கர்த்தருடைய சிட்சைக்கு நாம் எவ்வாறு பதில் செயல் செய்ய வேண்டும்? அந்தக் கேள்வியை மறுசொற்றொடராக்க என்னை அனுமதியுங்கள்: விரும்பத்தகாத, விருப்பம் கொள்ளத் தகுதியற்ற அல்லது மகிழ்வற்ற விஷயத்தை நாம் அனுபவிக்கும்போது, நமது பதில் செயல் என்னவாக இருக்க வேண்டும்?[8]*

### பூமிக்குரிய தந்தையர்கள்

*அன்புசெய்யும் ஒரு தந்தையின் சிட்சித்தலுக்கு ஒரு பிள்ளை எவ்வாறு பதில் செயல் செய்கிறான்? பெரும்பான்மையான பிள்ளைகள் தங்களைச் சிட்சிக்கப் போதுமான அளவு அக்கறை கொள்ளும் தங்களது தந்தையர்களை மதிக்கின்றனர் என்று 9அ வசனம் குறிப்பிடுகிறது.[9] பிள்ளைகள் தங்கள் தந்தையர்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டும், அவர்களின் அறிவுறுத்துதலைக் கைக்கொள்ள வேண்டும் மற்றும் அவர்களின் சிட்சையில் இருந்து பயன் அடைய வேண்டும் என்று பழைய ஏற்பாடு போதித்தது (காண்க நீதிமொழிகள் 13:1; 19:20). அவர்கள் அவ்வாறு செய்தால் வாழ்வின் பிந்திய பகுதியில் அவர்கள் பின்னோக்கித் திரும்பப் பார்த்து பெற்றுக்கொண்ட சிட்சையின் பயனைக் காண முடியும் (எபிரெயர் 12:11ஆ).*

### பரலோகத்தில் உள்ள தந்தை

*பூமிக்குரிய தந்தையர்களை நாம் மதித்தால், நம்மை அன்புகூரும் பரலோகத்தில் உள்ள நமது தந்தையின் சிட்சித்தலை நாம் எவ்வளவு அதிகமாக மதிக்க வேண்டும் (வசனம் 9)? எழுத்தாளர் தமது வாசகர்கள் தங்களுக்கு நேரிடும் சோதனைகளை மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டும் என்று கூறவில்லை (வசனம் 11அ),[10] ஆனால் அவர்கள் ஒரு நல்ல எண்ணப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறினார். சிட்சைக்குக் கொண்டிருக்க வேண்டிய ஏற்புடைய பதில் செயலை அவர் 5ம் வசனத்தில் வரைகுறிப்பிட்டார்:*

*கர்த்தரால் சிட்சிக்கப் படுதல் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதை மறந்துவிட வேண்டாம் (வசனம் 5அ). சோதனைகள் நம்மை மூழ்கடித்துவிடுவதாக அச்சுறுத்தும்போது, இவ்வசனப்பகுதியில் உள்ள பின்வரும் சத்தியங்களின் பார்வையை இழந்து விடவேண்டாம்:*

1. *தேவன் உங்களை நேசிக்கிறார்.*
2. *சிட்சித்தல் என்பது மகன் என்ற உரிமைக்கு நிரூபணமாக இருக்க முடியும்.*
3. *நடக்கிற யாவும் நம்மை மேன்மையான மக்களாக்கக் கூடும்.*

"*கர்த்தருடைய சிட்சையை அற்பமாக* எண்ண வேண்டாம்" (வசனம் 5ஆ). அதைத் தீவிரமானதாக எடுத்துக்கொள்ளுங்கள். அதில் இருந்து நீங்கள் எதைக் கற்றுக்கொள்ள முடியும் என்று எண்ணுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, "அவரால் கடிந்துகொள்ளப்படும்போது *சோர்ந்துபோகாதிருங்கள்*" (வசனம் 5இ). வெளியேறிவிடுவதற்குப் பிரச்சனைகள் ஒரு சாக்குபோக்காக இருப்பதை அனுமதியாதிருங்கள், ஆனால் தொடர்ந்து முன்செல்வதற்கான ஊக்குவித்தலாக அவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். கிறிஸ்தவர்கள் "சகிப்புத்தன்மை" கொண்டிருக்கும்படி அவர்களை ஊக்குவித்தல் என்பது இந்த நிருபத்தின் நோக்கமாக இருந்தது.

நாம் சிட்சிக்கப் படும்போது, நாம் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக அல்லது முரட்டுத்தனம் கொண்டவர்களாக இருக்க முடியும். நாம் தாழ்மையானவர்களாக அல்லது வெறுப்புணர்வு கொண்டவர்களாக இருக்க முடியும். நாம் பயபக்தி உள்ளவர்களாக அல்லது மனக்கசப்பு உள்ளவர்களாக இருக்க முடியும். "ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டும்" (வசனம் 9ஆ) மற்றும் நாம், "நீதியாக சமாதான பலனை" கொண்டிருப்பவர்கள் ஆவதற்கு, "அதில் பழக [பயிற்றுவிக்கப்பட]" வேண்டும் என்று எபிரெயருக்கு எழுதிய நிருபம் நமக்கு அறைகூவல் விடுக்கிறது (வசனம் 11).

சமீபத்திய வகுப்பு ஒன்றில், எபிரெயருக்கு எழுதிய நிருபம் பற்றிப் போதித்ததில், டக் மார்ட்டின்டேல் அவர்கள், "நீங்கள் பிரச்சனைகளைக் கொண்டிருக்கும்போது, உங்கள் கைகளை மேல்நோக்கித் தூக்கி, இது எனக்கு நடைபெறுவது ஏன்? என்று கேட்காதீர்கள். மாறாக இது என்னை ஒரு மேன்மையான நபராக்குவது எப்படி? என்று கேளுங்கள்" என்று கூறினார். பின்பு அவர் "எனக்கு என்ன நடந்தாலும், நான் அதிக பலம் கொண்டவனாக வெளிவரும்படிக்கு அதற்குப் பதில்செயல் செய்ய முயற்சிக்கிறேன்" என்று கூறினார்.[11]

## போதகருக்குக் குறிப்புகள்

நமது வாழ்விற்குள் வரும் சோதனைகள் குறித்து, எல்லா விபரங்களும் அடங்கிய கலந்துரையாடல் ஒன்றைத் தருதல் என்பது, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரின் நோக்கமாக இருக்கவில்லை. கிறிஸ்தவத்தில் இருந்து புறம்பே திரும்புவதற்கு, இடர்ப்பாடு ஒரு காரணமாக இருக்கவில்லை என்ற கருத்தை நிலைநாட்டத் தேவையான வகையில் அவரிடம் இருந்தவற்றையே அவர் கூறினார். சோதனைகள் மற்றும் சோதிக்கப்படுதல்கள் என்ற பாடக்கருத்தைப் பற்றி இன்னும் ஆழமான படிப்பு ஒன்றைப் படிக்க நீங்கள் விரும்பினால், ரோமர் 5:3-5 மற்றும் யாக்கோபு 1:2-4 ஆகிய வசனப்பகுதிகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

---

குறிப்புகள்

[1]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 97. [2]உபாகமம் 11:2, 5ஐயும் கவனிக்கவும். [3]யோபுவை சோதிப்பதற்குச் சாத்தானைத் தேவன்

*அனுமதித்தார் (யோபு 1; 2). [4]நாம் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளில், நாம் தனித்தி ருப்பதில்லை, ஏனெனில் தேவன் நமக்கு ஏற்படும் சோதனைகளை நம்மால் தாங்கக் கூடியவை என்ற அளவுக்கு மட்டுப்படுத்துகிறார். அவற்றை நாம் சகித்துக்கொள்ளக் கூடிய ஒரு வழியை அவர் எப்போதும் ஏற்படுத்துகிறார் (காண்க 1 கொரிந்தியர் 10:13). [5]பிரச்சனைகளைக் கொண்டிருக்கிறோம் என்பது மாத்திரம், நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதற்கு நிரூபணம் ஆவதில்லை; ஆனால் கிறிஸ்தவர்கள் பாடுகளையும் உபத்திரவங்களையும் எதிர்கொள்ளுவார்கள் என்று வேதவசனங்கள் கூறுகிறது (நடபடிகள் 14:22; 2 தீமோத்தேயு 3:12). [6]யோபுவின் "நண்பர்கள்" யோபுவைப் பொறுத்தமட்டில் இதுவே விஷயமாக இருந்தது என்று நினைத்தனர். அவர் தமது பாவங்களை அறிக்கையிட்டால் அவர் நலமடைவார் என்று அவர்கள் அவரிடத்தில் தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தனர். [7]நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் - அவர் தமது பிள்ளைகள் பரிதாபமான வாழ்வை அனுபவிக்க வேண்டும் என்று அவர் விரும்புவதில்லை - ஆனால் இது, நம்மை பலமுள்ளவர்கள் ஆக்க வேண்டும், நம்மைப் பரலோகத்திற்கு ஆயத்தப்படுத்த வேண்டும் என்ற அவரது முதன்மை யான நோக்கத்திற்கு இரண்டாவதானதாக உள்ளது. [8]நினைவில் வையுங்கள்: மோசமான விஷயங்கள் நமக்கு நடக்கும்போது அவற்றைப் பற்றி நாம் அறிய முடியாதவை அதிகமாக உள்ளன. ஆகையால் நாம், மகிழ்வற்ற சூழ்நிலைகளுக்கு பொதுவாக நமது பதில் செயல் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். [9]இதற்கு விதிவிலக்குகள் உள்ளன என்பது உண்மையே. [10]யாக்கோபு, "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, ... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று எழுதினார் (யாக்கோபு 1:2), ஆனால் அவர், சோதனைகளின் நிறைவான பலன்களை வலியுறுத்தினார் (வசனங்கள் 3, 4). சோதனைகள் என்பவை அந்தக் கணத்தில் மகிழ்வான நிகழ்வுகளாக இருப்பதில்லை என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் குறிப்பிடுகிறார்.*

[11]Doug Martindale, class on Hebrews, Eastside church of Christ, Midwest City, Oklahoma, 2008.